உ

சிவமயம்



யாழ்ப்பாணம் தென்மாராட்சி அல்லாரை வடக்கைப் பிறப்பிடமாகவும், லண்டன் நகரை வதிவிடமாகக் கொண்டவரும்

**திரு சண்முகலிங்கம் அரவிந்தன் அவர்களின்**

பூவுலகப்பிரிவு குறித்த

# அஞ்சலி மலர்

02.03.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

புன்னகை பூத்த திருவதனம்
புகழ் பூத்த பொக்கிசம்
தன்னலமே இல்லாத சேவையுள்ளம்
உறவுகள் மீது ஒப்பற்ற அன்பு கொண்டோன்
மறக்க முடியாத மாண்பாளன்
குறை யாரும் சொல்லாத
நிறைகுடமாய் வாழ்ந்தவன்
அன்புக்குரிய எங்கள் அரவிந்தனுக்கு
இந்நூல் சமர்ப்பணம்

எங்கள் குலம் காத்த கோமகன்
எங்கட்கு நீரோர் ஒளிவிளக்கு
எம்மைக் கலங்காது காத்தவனே
அன்புக்கோர் அகல் விளக்கு
பண்புக்கு நீரோர் பார்த்தீபன்
எண்ணாத நேரத்தில் இடைநடுவில்
அன்பு மனைவி மக்களை அழவைத்து
அன்னை தந்தை மற்றும் உடன்பிறப்புகள்
அனைவரையும் அழவைத்தெங்கு சென்றாய்
என்றும் எங்கள் அனைவரதும் நெஞ்சில்
நிறைந்திருக்கும் உன்பாத கமலங்களுக்கு
இவ்வினிய மலரினைக் காணிக்கையாக்குகின்றோம்.


ஆருயிர் துணைவி, அன்பு மழலைகள்
அம்மா அப்பா உடன் பிறப்புக்கள்
மற்றும் உறவினர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மண்ணில்:09.12.1969 விண்ணில்:31.01.2011

எமது அனைவரதும் உள்ளங்களை உறைய வைத்து
உலகு துறந்த உத்தமர்

# திரு சண்முகலிங்கம் அரவிந்தன்

## திதி நிர்ணய வெண்பா

புகழுறு விகிர்தி பொலிவுறு தைத் திங்கள்
திகழுறு திரயோதசி தேய்பிறையில் - அகமினியன்
எம்மன்பு அரவிந்தன் இறையுலகு சென்றானே
எம்மைத் துயரில் ஈர்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தேவாரம்

பொன்னார் மேனியனே புலித்தோலையரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே

மந்திரவாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறுசூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேன்அடி யேன் அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

மானினேர்விழி மாதராய் வழு
திக்கு மாபெருந் தேவிகேள்
பானல்வாயொடு பாலன் ஈங்கிவன்
என்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய
இடங்களில்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு
ஆலவாயரன் நிற்கவே

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## பெரியபுராணம்

உலகெ லாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற் குருவாகிப்
பிறவாகித திரமான பெரு வாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேச குமரேசா
கறையானைக் கிழையோனே கதிர்காமப் பெருமாளே

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப்புகழ் பாடி
முக்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமதானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அரங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உண் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க

ஈசன்அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப்பன் யான்

கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய்யாயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறை யோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட முடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச்சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டளிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற்பிறவி அறுப்பானே ஓ வென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வழிபடு தெய்வங்களின்
## திருவடி தொழிதேற்றி....

அமரர் திரு சண்முகலிங்கம் அரவிந்தன்
அவர்களுக்கு நற்கதி அருளுமாறு அவர்
வழிபட்டு வந்த குல தெய்வங்கள் மீது பாடிய பராவல் பாக்கள்
அருள்மிகு அல்லாரை சீமையந்தாழ் பிள்ளையார்.

சீர்மலியும் அல்லாரை யென்னும் ஊரில்
திருமலியும் சீமையந்தாழில் கோயில்
பேர்மலிந்த ஊர்மக்கள் பெரிதும் போற்றும்
பிறவிநோய் பிரிவதற்கு வழியைக் காட்டும்
கார்குழலி உமைமைந்தா கணபதியே காப்பாய்
காலனவன் கலர்ந்த கவின் மைந்தன் அரவிந்தன
பார்புகழ் வாழ்ந்தவன் இன்றுன் பாதம் வந்தான்
பாதுகாத்து அத்துவத் முத்தி யீவாய்

**அருள்மிகு கச்சாய் வடக்கு ஒட்டங்கேணி பிள்ளையார்**

மெய்மை மனத்தடியார்கள் சூழ்ந்து இலங்கும்
கச்சாய் வடக்கு ஒட்டங்கேணி எழுந்திருக்கும்
தெய்வஞான விநாயகராம் உன்னை எண்ணி
தினமதினம் உனக்கு சுகமளிக்க உன் அன்னை
உய்யவருள் வேண்டினேன் ஒப்பற்ற தேவா!
உள்ளத்தூய்மை கொண்ட எம்மினிய
மெய்யானம் தந்தருளம் உன்திருப்பாதம் வந்தனை
காத்து அருளீர்ந்து அத்துவத் முத்தியீவாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்ததி வரலாறு

அமரர் கனகசபை
+
அமரர் சிதம்பரம்

அமரர் செல்வநாயகி

அமரர் வள்ளிநாயகி

சண்முகலிங்கம்

அமரர் கணேசலிங்கம்

தங்கம்மா

இரா

ராகுலன்
+
நந்தினி

நிருஷின்
துவாரகன்

அகிலன்
+
உதயகுமாரி
(ஆனந்தி)

பிரவீன்
பிரியங்கா

அரவிந்தன்
+
சசிகலா(சசி

வாசிகன்
யதுர்ஷகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாறு

அமரர் கதிர்காமர்
+
அமரர் முத்துப்பிள்ளை

இராசையா | நல்லம்மா | மகேஸ்வரிப்பிள்ளை | இராசம்மா | இராசம்மா | யோகராசா

ந்தன்
+
ா(சசி)

கன்
ஷிகன்

சுதர்சன்
+ கோகிலவாணி
(வாணி)

கபிஷன்
அனுஷன்
சந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அருள்மிகு அல்லாரை தாழையடி அம்மன்

தெங்குபனை மாபலா தேமா இன்னும்
செந்நெல்லொடு கமுகு மற்று கன்னலியை
தங்கிவளர் வளமுள்ள திருப்பதியம் அல்லாரை
சார்ந்தினது வாழ்கின்ற மக்கட் கென்றும்
எங்குமருள் செய்யவென இனிதாய் எழுந்தருள்
என்றுமருள் அளிக்கு கண்ணகித் தாயே
இங்கிருந்துன் பொற்பாதம் வந்த அரவிந்தனை
ஏற்று அவருக்கு அத்துவிர முத்தியீவாய்

## அருள்மிகு கச்சாய் கண்ணகி அம்மன்

பூர்வீக கதைகள் பலவும் கொண்ட
பொற்பதியாம் கச்சாயூரில் கோயில் கொண்டு
ஆர்வமொரு தொழுது வரும் அடியார்க் கெல்லாம்
அருள்மாரி பொழிந்தருளும் அற்புதத் தாயே
கார்சுமந்த பூங்கூந்தல் கண்ணகித் தாயே
கற்பரசி! பொற்பரசி காவலர்க்கு அன்று
ஓர்நீதி கற்பித்தாய் உன்னருள்நாடி அரவிந்தன்
உபயபதம் ஓடிவந்தான் அபயம் ஈவாய்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மாறாத நோய் கண்டு மண்ணுலகை நீங்கி விண்ணுலகம் சென்ற எமது நெஞ்சை விட்டகலா அன்புக்குரிய

# திரு சண்முகலிங்கம் அரவிந்தன் அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

இலங்கையின் வடபகுதியின் தலைநகரமான யாழ்ப்பானத்திற்கு தெற்கே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நால்வகை நிலங்களும் அமையப் பெற்ற வளம் நிறைந்த பாரிய பிரதேம் தென்மராட்சி. இப்பிரதேசத்தில் அழகிய பல சிற்றூர்களும் சில பேரூர்களுமுண்டு. இவ்வூர்களில் எல்லாம் திருவருள் நிறைந்த ஆலயங்களும் பேர்பெற்ற கல்லூரிகளும் அறிவூட்டும் பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் என்பவற்றுடன் இயற்கை எழில் கொஞ்சும் கடலும் கடல் வளமும் வனப்பூட்டும் தென்னை பனந்தோப்புகளும் முக்கனிகள் தரும் மா, பலா, வாழை மற்றும் தென்னை, கமுகு, செந்நெல் வளமும் திவ்விய ஊர்களைக் கொண்டது. சாவகச்சேரி தென்மராட்சிப் பிரதேசம். இப்பிரதேசத்தில் சைவமும் தமிழும் வளர்த்த பண்டிமணி கணபதிப்பிள்ளை. சுந்தக் கவிமணி சின்னையாப்புலவர் எண்ணற்ற புகழ் பூத்த ஆசிரியர்கள்,

பண்டிதர்கள், கவிஞர்கள், கட்டிடக் கலைஞர்கள், தொழில்சார் நிபுணர்கள் எனப் பலரும் வாழ்ந்த வாழுகின்ற தென்மராட்சியில் A9 வீதியில் அமைந்துள்ள மீசாலை, கொடிகாமம் பகுதிகளுக்குத் தெற்கே அமைந்துள்ளது. அல்லாரை என்னும் அழகிய ஊர் உண்டு. இவ்வூரில் பல வருடங்களுக்கு முன் வாழ்ந்த சைவ வேளாண்குல திலகராகிய திருமதி கனகசபை சிதம்பரம் தம்பதிகளின் மகன் திரு சண்முகலிங்கத்திற்கும் அவரது அன்புத் துனைவியார் மகேஸ்வரிக்கும் மூன்றாவது மகனாக பிறந்தவரே திரு சண்முகலிங்கம் அரவிந்தன் ஆவார். இவரது உடன் பிறப்புகளாக பிறந்தவர்கள் திரு ராகுலன், திரு அகிலன் மற்றும் திரு சுதர்சன்.

பிறப்பிலேயே நல்ல அழகும் ஆரோக்கியமம் கொண்ட குழந்தையாகி ய அரவிந்தன் தாய் தந்தையரின் அன்பான அரவணைப்பில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்து பள்ளி செல்லும் வயதையடைந்தார். இவரது பெற்றோர் உரியவயதில் வித்தியாரம்பம் செய்வித்து ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்காக சாவகச்சேரி யாழ் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை சங்கத்தானையில் சேர்ந்தனர். கல்வியில் நல்ல ஆர்வமுடையவராக மட்டுமன்றி விளையாட்டிலும் விருப்பமுடையவராகவும் அதிபர் ஆசிரியர்கள் பாராட்டும்படியான நடத்தைக் கோலமுடையவராகத் திகழ்ந்தார். இப்பாடசாலையில் ஆரம்பக் கல்வியை நிறைவு செய்த பின்னர் உயர்கல்வி பெறுவதற்காக தென்மராட்சி சாவகச்சேரியில் பிரபல்யமான கல்லூரியாக விளங்குகின்ற யாழ்/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார்.

மேற்படி கல்லூரியில் தனது படிப்பை நிறைவு செய்த பின்னர் அப்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்னும் முதுமொழிக்கேற்ப இவரது தமையனார் திரு. ராகுலன் இத்தாலியில் வேலை பார்த்து வந்ததால் இவரும் அங்கு சென்று தொழில் புரிந்து வந்தார். சில வருடங்களின் பின்னர் லண்டன் மாநகரம் சென்று வேலை செய்து வந்தார்.

திரு அரவிந்தன் அவர்களை இல்லற வாழ்வில் இணைக்க விரும்பிய இவரது தாய் தந்தையர் டச்சு வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த திரு திருமதி கந்தையா மீனாட்சிப்பிள்ளையவர்களின் கனிஷ்ட புத்திரி செல்வி சசிகலாவை திருமணம் செய்து வைத்தனர்.

புதுமணத் தம்பதிகள் பெற்றோர் பெரியோரது நல்லாசிகளைப் பெற்று குலதெய்வங்களையும் வேண்டி வணங்கினர். மனமொத்த தம்பதிகளான இவர்களின் இல்லற வாழ்வின் இனிய நற்பயனாக வாசிகன், யதுர்ஷன் என்னும் மக்கட் செல்வங்கள் பிறந்தனர். பிள்ளைகள் இருவரையும் கண்ணை இமை காப்பது போல் வளர்த்து வந்த பெற்றோர்கள் இருவரும் குழந்தைகள் மீது அகிக அன்பும் பாசமும் வைத்து அவர்களது மழலை மொழி கேட்டு மகிழ்ந்தனர். திரு. அரவிந்தன் வேலைக்கு செல்லும் நேரம் தவிர மிகுதியில் பொழுதெல்லாம் தனது அன்பான மனைவி ஆசைமிகு மழலை செல்வங்களுடன் மகிழ்ச்சிகரமாக வாழ்ந்து வந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திரு சண்முகலிங்கம் அரவிந்தன் அவர்களின் உடன்பிறப்புகள் விபரம்

திரு. ச. ராகுலன் (மூத்த தமையன்)

இவர் இடைக்குறிச்சி வரணியைச் சேர்ந்த திரு திருமதி சிதம்பர நாதன் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகள் நந்தினி என்பவரைத் திருமணம் செய்து நிருஷன், துவாரகன் ஆகிய மக்கட் செல்வங்களுடன் கனடாவில் வசதியாக வாழ்ந்து வருகிறார்.

திரு. அகிலன் (இரண்டாவது தமையன்)

இவர் ஆவரங்காலைச் சேர்ந்த திரு திருமதி திருநாவுக்கண்மணி தம்பதிகளின் மகள் உதயகுமாரி (ஆன............) என்பவரைத் திருமணம் செய்து பிரவீன், பிரியங்கா என்று பிள்ளைகளுடன் கனடாவில் வசதியாக வாழ்கிறார்.

சுதர்சன் :

அமரர் அரவிந்தனின் தம்பியாகிய இவர் மீசாவையைச் சேர்ந்த திரு திருமதி நவநீதராஜா மகேஸ்வரி தம்பதிகளின் மகள் கோகிலவானை (வாணி என்பவரைத் திருமணம் செய்து கபி'ன் அனு'ன், சந்தியா என்றும் பிள்ளைகளுடன் அவுஸ்ரேலியா நாட்டில் நல்ல வசதிகளுடன் வாழ்ந்து வருகிறார்.

சசிகலாவின் சகோதரி சுலோசனா கணவர் லவக்குமாருடன் ரிஷீகேசன் சாருகேஷி கபினேஷ் என்றும் குழந்தைகளுடன் இலங்கையில் திருகோணமலையில் வசித்துவருகிறார்.

கடந்த சில மாதங்களாக சுகயீனமுறற இவர் மருந்து மாத்தி ரைகள் பாவித்து சுகமாகியிருந்தார். கடந்த மாதம் திடிரென நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு இவருக்கு அதி தீவிர சிவிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அவருக்கு விசேட சிகிச்சைகள் அளிக்கப்பட்டு ஓரளவு சுகமாகி சாதாரண வாட்டுக்கு மாற்றவிருந்த வேளையில் திடீர் என்று வருத்தம் கடுமையாகி உயிர் துறந்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் அவரது மனைவி மக்கள் பெற்றோர் உடன் பிறப்புக்கள் உறவுகள் ஆறாத்துயரில் ஆழ்ந்தனர். கடந்த 31.01.2011 அன்று லண்டன் நேரம் காலை 7.00மணியளவில் திரயோதசித்திதியும் சித்தயோகமும் கொண்ட சுபவேளையில் இவ்வுலக வாழ்வகன்று இறையுலகு எய்தினார்.

இவரது இறுதிக் கிரிகைகள் லண்டனில் முறைப்படி நடைபெற்று பூதவுடன் தீயுடன் சங்கமம் ஆக்கப்பட்டது. "எங்கும் நிறைந்து எல்லாம் வல்ல இறைவன்" திருவடியில் இவரது ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சை விட்டகலாது என்றும் எங்கள் இதயங்களில் நீங்காது
இடம் பிடிக்க வைத்து
உலகு துறந்த உத்தமர்
அமரர் திரு சண்முகலிங்கம், அரவிந்தன் அவர்களின்
கண்ணீர் அஞ்சலிக் கவிதைப் பூக்கள்
மனைவி, மக்கள் அன்னை தந்தை
உடன்பிறப்புக்கள் உற்றார், உறவுகள்
அனைவரதும் ஆதங்கம்

## மனைவியின் மனத்துயர்

அன்புநதி ஆகுமுயர் இல்லத்தில் இணைந்தாலே
அகமகிழ்ந்து தொழிற்செல்வம் இருவரை நாம் பெற்றோம்
இன்னுயிர் கணவரோடும் இனியவிரு மக்களோடும்
உறவோர் போற்ற உலகோர் வியக்க
பன்னெடும் காலம் வாழ்ந்து பாலகரிருவரையும்
பாரோர் போற்ற வளர்ப்போம் என்றதயோ!
அன்புருவே! ஆருயிரே!! என்னுள்ளத்து ஆரமுதே!!!
உன்னையினி எப்பிறப்பில் காண்பதெங்கே ஐயாவே!

துணையிழந்த பிடியெனச் சோடிழந்த அன்றிலென துயரம் பொங்க
ஊனைப்பிரிந்து மிகவாடி உளம்நோக பொலிவிழந்து உடலும் சோர
எனைப்பிரிந்து எங்குசென்றாய் இத்தரையில் எப்படி நான் வாழுவேனோ
உனைப்பிரிந்து ...ழ்வதும் எந்தனுக்கு ஊழோ ஐயா!

## மக்கள் மனத்துயர்:

அள்ளியெமைக் கொஞ்சிய ஆசைமுகம் அணைந்தே போச்சு
துள்ளிநாம் விளையாட தூக்கியணைத்து முத்தம் தந்தீரே
வெள்ளையுள்ளம் கொண்ட எம் விருப்பமிகு அப்பாவே
கள்ளமிலா உந்தன் கவின்சிரிப்பை காணாதழுகின்றோம்

கன்னம் குழியக் கரும்பிபினிய முத்தங்கள்
முன்னரெமக்கு அளித்தீர்கள் மூண்ட எம் துயர்தீருமா?
அன்னம்பால் முக்கனிகள் அள்ளித் தந்தீர்கள்
என்ன குறை நாம் செய்தோம் எம்மினிய அப்பாவே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவயோகசுவாமிகள் அருளிச்செய்த

# மங்களம் ஜெய மங்களம்

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதும் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத் தன்னாலறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட் டுண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுகட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீர்காழித் தேவர்க்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்கும் தங்கும் உயிர்களுக்கு மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமியம்மைப்பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றா இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பும் அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய! நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுக்கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சகபாணி
அருள்வாமி அபிராமியே.

## வள்ளலார் வாக்கு

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமை பெறு நினது புகழ் பேச வேண்டும்
பொய்மை பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடிதொழுக வேண்டும்
மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்
மருவு பெண்ணாசையை மறக்க வேண்டும்
உனை மறவாதிருக்க வேண்டும்
மதி வேண்டும் நின் கருணை நிதி வேண்டும்
நோயற்ற வாழ்வு நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னாயிற் கந்த கோட்டத்துள்வளர்
தலமோங்க கந்தவேள்
தண்முகத்துய்யமணி, எண்முகச்சைவமணி
ஷண்முகத் தெய்வமணியே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

எமது குடும்பத்தின் பாசமலராய் அன்புக்கு அணிகலனாய் அன்பு மனையாளொடும் மக்கள் இருவரோடும் எம்முடன் வாழ்ந்து அகவை 41ல் எங்களனைவரையும ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட அன்புக்குரிய அமரர் திரு சண்முகலிங்கம் அரவிந்தன் அவர்களின் பூவுலகப்பிரிவுச் செய்தி கேட்டு லண்டனில் உள்ள அவரது இல்லம் தேடிவந்து துன்ப துயரங்களில் பங்கு கொண்டவர்கள் 06.02.2011 அன்று நடைபெற்ற இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர் வேறு வேறு நாடுகளிலிருந்து கலந்து கொண்ட உற்றார் உறவினர், நண்பர்கள் தொலைபேசி மூலம் ஆறுதல் அளித்தவர்கள் அனைவருக்கும் இதயம் கலந்த நன்றிகள்.

மற்றும் இறுதிக்கிரிகைளை நடத்திய குருக்கள்மார் 02.03.2011 இன்று நடைபெற்ற வீட்டுக்கிருத்திய ஆத்மசாந்தி பிரார்த்தனை நடத்திய குருக்கள்மார் கலந்து சிறப்பித்த அன்புள்ளம் கொண்ட அனைவருக்கும் மற்றும் இவ்வினிய நினைவு மலரினை ஆக்கித் தொகுத்து தந்த எமது உறவினரும் ஓய்வு பெற்ற அதிபருமாகிய திரு. சு.க. நவரத்தினம் அவர்களுக்கும் ஜே ஆர் அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

நன்றி!
இவ்வண்ணம்
என்றும் உன் நினைவின் வாழும் அம்மா, அப்பா,
மனைவி, மக்கள்
உடன்பிறப்புகள் மற்றும் உறவுகள்
33, Sutherland Road,
Edmonton
London
N9 7QE



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரத்தி

ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி - ஓம்ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா
- ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் அடைய -
அம்மம்மா தேவையெல்லாம் மறைய
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை
- ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி வரமருள்வாய் - அம்மம்மா ஈஸ்வரி வரமருள்வாய்
கரங்குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய்
- ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

காசினியெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் -
அம்மம்மா கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழக் காட்டடி காட்சி
தேவியுன் அடைக்கலமே
- ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து ஞான - நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா
- ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed at JR PRINT Tel: 020 8503 6643

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org